2. அறிவிப்பு

19-4-1995 அன்று நடைபெற்ற எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பில் நியமன உறுப்பினர் டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா அளித்த வாக்கு சேர்த்துக் கொள்ளப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 19-4-1995 ஆம் நாளன்று எண்ணிக் கணிக்கும் முறைப்படி இங்கு வாக்கெடுப்பு நடைபெற்றபோது, பேரவையின் நியமன உறுப்பினர் டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை என்று அறிவித்திருந்தேன். ஆனால், விதிமுறைகளையும், கடந்தகால நேர்வுகளையும் எடுத்துப் பார்த்தபோது, இங்கு எழுப்பப்படும் பிரச்சினைகளில் அல்லது இங்கு கொண்டுவரப்படும் தீர்மானங்களில் அவருக்கு வாக்களிக்க உரிமை இருந்து வந்துள்ளது. அவைக்கு வெளியே ராஜ்யசபைத் தேர்தல் போன்ற தேர்தல்களில்தான் அவருக்கு வாக்களிக்கிற உரிமை இல்லை என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அன்றையதினம் அவருக்கு வாக்களிக்க உரிமை இருந்தது. ஆகவே, அன்று அவர் அளித்த வாக்கைச் சேர்த்து, அன்றையதினம் எண்ணிக் கணிக்கும் முறையில், நான் அறிவித்த அந்த அறிவிப்பில் அந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டி வசதி செய்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. குழந்தைவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அரசு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லாததால் நோயாளிகட்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.